நல்லூர் கிளை நூலகம்
மாநகரசபை மன்றம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 25 ஞாயிற்றுக்கிழமை (08-03-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 102

# மண் மீட்புப் போரில் ஈழமகளிர் சாதனை!

## தலைவர் பிரபா பெருமிதம்

யாழ்ப்பாணம், மார்ச் 8

''மண்மீட்புப் போர்க்களத்தில் இன்று தமிழ் இளம் பெண்கள் ஆயுதமேந்தி முழு உலகமுமே வியக்கும் வகையில் அபாரமான அர்ப்பணிப்புகளைச் செய்து வருகின்றனர். விடுதலைப் புலிகளின் மகளிர் படைப்பிரிவின் தோற்றமும், வளர்ச்சியும், எழுச்சியும் எமது இயக்கம் படைத்த மாபெரும் சாதனைகளில் ஒன்று என்பதை நான் பெருமிதத்துடன் கூறமுடியும்.'' — இப்படித் தெரிவித்திருக்கிறார் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன்.

சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டி அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;-

இன்று அனைத்துலக பெண்கள் நாள்; உலகப் பெண்ணினத்தின் உரிமைக்குரல் உலகெங்கும்முழங்கும் ஓர் எழுச்சி நாள்; மனித இனத்தின் சரி பாதி சனத்தொகையினர் சமநீதிகேட்டு நிற்கும் ஒரு புரட்சி

[5ஆம் பக்கம் பார்க்க]

# தமிழீழ பெண்கள் மாநாடு கிளிநொச்சியில் ஆரம்பம்

— கிளிநொச்சி உதயன் செய்தியாளர் —

கிளிநொச்சி, மார்ச் 8

விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியினரின் தமிழீழப் பெண்கள் மாநாடு நேற்றுக் காலை 9 மணிக்கு கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலயத்தில் ஆரம்பமாகியது. மாநாடு தொடர்ந்து இன்றும் நடைபெறும்.

மாநாட்டை மகளிர் படைப்பிரிவின் துணைத் தளபதி செல்வி ஜெனி கொடியேற்றி ஆரம்பித்து வைத்தார். மங்கள விளக்கை செல்வி சாந்தி ஏற்றினார். விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி ஜெயா தலைமையில் மாநாடு நடைபெறுகின்றது.

மாநாட்டில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, மணலாறு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான மகளிர் பேராளர்கள் கலந்து கொள்கின்றார்கள்.

நேற்றைய முதல் நாள் நிகழ்ச்சிகளில் விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் திருவாளர்கள் மூர்த்தி, பரா. கெங்கா, மனோ, பிரசாந்த், தீபன் ஆகியோரும் கலந்து கொண்டனர். [ஒ-76]

## இன்று எழுச்சி ஊர்வலம்

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியினரால் நடத்தப்படும் மாபெரும் எழுச்சி ஊர்வலமும், பொதுக் கூட்டமும் இன்று மாலை கிளிநொச்சியில் நடைபெற உள்ளன.

பிற்பகல் 2 மணிக்கு இரணைமடுச் சந்தியில் ஆரம்பமாகும் மகளிரின் எழுச்சி ஊர்வலம் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் முடிவடையும்.

தொடர்ந்து மகாவித்தியாலய விளையாட்டுத் திடலில் பொதுக் கூட்டம் இடம் பெறும். விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் உரையாற்றுவார்கள்.

தொடர்ந்து கலைநிகழ்ச்சிகளும் நடைபெறும். [ஒ-76]

## கிளிநொச்சி விழாக்கோலம்

கிளிநொச்சி, மார்ச் 8

தமிழீழப் பெண்கள் மாநாடு, சர்வதேச மகளிர் தினம் ஆகியவற்றை முன்னிட்டு கிளிநொச்சி நகரம் விழாக்கோலம் பூண்டுள்ளது.

நகரப் பகுதி சோடனை அலங்காரங்களால் எழில் பூத்துக் காணப்படுகிறது. வீதிகள் எங்கும் சிவப்பு, மஞ்சள் வர்ணக் காகிதங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. நகரப் பகுதி எங்கும் வாழை, தோரணங்கள் கட்டப்பட்டுள்ளன. [ஒ-76]

## முச்சந்தி முரளி




மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்......!

# காங்கேசன் மூலம் உணவு: பரீட்சார்த்த முயற்சி வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 8

காங்கேசன்துறையிலிருந்து உணவுப் பொருள்களை வாகன அணி மூலம் எடுத்து வர மேற்கொள்ளப்பட்ட பரீட்சார்த்த முயற்சி நேற்று வெற்றியளித்தது.

அதனை அடுத்து மேலும் எட்டு லொறிகள் கொண்ட வாகன அணி நாளை உணவுப் பொருள்களை ஏற்றிவர அங்கு செல்கிறது.

நேற்றைய பரீட்சார்த்த முயற்சியின் போது யாழ்ப்பாணத்தில் இருந்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினரின் வாகனங்கள் சகிதம் புறப்பட்டுச் சென்ற நான்கு லொறிகளும், 30 மெற்றிக் தொன் மா, 10 மெற்றிக் தொன் அரிசி என்பவற்றை ஏற்றிக்கொண்டு நேற்று மாலை யாழ் நகர் வந்தடைந்தன

சேந்தாங்குளம் — கீரிமலை வீதி வழியாகச் சென்ற வாகன அணி காலை 11 மணியளவில் கீரிமலைப் பகுதிக்குள் பிரவேசித்தது.

[6ஆம் பக்கம் பார்க்க]

## வவுனியாவில் தாக்குதல்!

கொழும்பு, மார்ச் 8

வவுனியாவிலுள்ள இராணுவ முகாம் ஒன்றை நேற்று அதிகாலை புலிகள் தாக்கிய போது படையினர் எதிர்த் தாக்குதலை நடத்தினர் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேசமயம்—

வவுனியா, நொச்சிமோட்டையில் உள்ள காவலரண்களில் இருந்து தடைகளை அகற்றுவதற்காக நேற்றுக் காலை வெளியேறிவந்த படையினரில் ஒருவர் விடுதலைப் புலிகளின் மிதிவெடிகளில் சிக்கி காலை இழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

படையினருடன் வந்த சமூக விரோத குழு உறுப்பினர் ஒருவரும் காலை இழந்தார். [ஒ-5-10]

# அரசைக் கலைக்க பிரதமர் ராவ் திட்டம்?

புதுடில்லி, மார்ச் 8

தமது அரசுக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடியை அடுத்து அரசசைக் கலைத்து பொதுத் தேர்தலை மீண்டும் நடத்துவது குறித்து இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் ஆலோசித்து வருகிறார்.

இது குறித்து ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமனுடனும் அவர் ஆலோசனை நடத்தினார் என்று ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

பிரதமர் ,அரசைக் கலைக்கக் கோரும் எண்ணத்தைக் கொண்டிருக்கிறார் என்பதை அமைச்சர் குலாம் நபி ஆஸாத் உறுதிப்படுத்தினார்.

ஜனாதிபதி உரை மீதான வாக்கெடுப்பின் போது அரசுக்கு எதிராக வாக்களித்து அரசைக் கவிழ்க்க எதிரணிகள் திட்டமிட்டிருப்பது தெரிந்ததே.

இதற்கிடையில்—

''நரசிம்மராவ் அரசை நாடாளுமன்றத்தில் தோற்கடிப்பது அவ்வளவு சுலபமல்ல'' — என்று எதிர்க் கட்சித் தலைவரும் பாரதீய ஜனதாக் கட்சித் தலைவருமான எல். கே. அத்வானி தெரிவித்திருக்கிறார். [உ-த-10]

## 4 மீனவர் வெட்டிக்கொலை

யாழ்ப்பாணம், மார்ச் 8

மட்டக்களப்பு மாவட்டம், ஏறாவூர் பகுதியில் உள்ள ஆறுமுகத்தான்குடி என்னும் இடத்தில் இருந்து கடந்த வார இறுதியில் மீன் பிடிக்கச் சென்ற நான்கு தமிழர்கள் ஊர்காவல் படையினரால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இளையதம்பி சோமநாதன் [வயது 55], தாமோதரம் சிவரத்தினம் [வயது 22], இராசையா பேரின்பராஜா [வயது 38], கதிர்காமத்தம்பி கோவிந்தசாமி [வயது 25] ஆகிய நால்வருமே கொலையுண்டவர்கள் ஆவர்.

மீன் பிடிக்கச் சென்று திரும்பி வராத இவர்களைத் தேடிச் சென்ற சமயம் வெட்டுக் காயங்களுடன் அவர்களது சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது. [ஒ-5]

## 16 பேர் நேற்று விடுதலை

பல்வேறு காரணங்களுக்காக புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்த 16 பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

நேற்று நண்பகல் கோண்டாவிலில் உள்ள யாழ். மாவட்ட செயலகத்தில் வைத்து அவர்கள் தத்தமது பெற்றோர்கள் மற்றும் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

## சட்ட விரோதமாக மரம் தறிப்போரை சுடுவதற்கு உத்தரவு!

சட்டவிரோதமாக மரங்களைத் தறிப்போரை, கண்ட இடத்திலேயே சுடுவதற்கான அதிகாரம் ஸ்ரீலங்கா பொலீஸாருக்கும், ஆயுதப்படையினருக்கும் வழங்கப்படவுள்ளது.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் இந்த அதிகாரத்தை வழங்க ஜனாதிபதி விசேட பணிப்புரை ஒன்றை விடுத்துள்ளார்.

இதற்கான சட்ட மூலத்தை விரைவில் தயாரிக்குமாறு அவர் உத்தரவிட்டுள்ளதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன [ஒ-10]

# எய்ட்ஸ் நோய்க்கு கோப்பாய் வாலிபர் பலி!

கொழும்பு, மார்ச். 8

கனடாவில் சில காலம் தங்கிவிட்டு நாடு திரும்பிய—யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் வாலிபர் ஒருவர் நீர்கொழும்பு ஆஸ்பத்திரியில் காலமானார். கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் இத்தகவலை வெளியிட்டன.

கடந்த 25 ஆம் திகதியன்று காலமான இவரின் சடலம் 27 ஆம் திகதியன்று தகனம் செய்யப்பட்டது. அதுவரை சடலம் ''சீல்'' செய்து பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியைச் சேர்ந்தவர் என்று கருதப்படும் இந்நபர், 1987 இல் தமது மனைவியுடன கனடாவுக்குப் போய் அண்மையில் நாடு திரும்பியிருந்தார். அங்கு இவர் ''எய்ட்ஸ்'' நோய்க்கு இலக்காகியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

இவரின் மனைவியின் இரத்தமும் தற்போது பரிசோதனைக்காக அனுப்பப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ-5]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெஞ்சமர் களத்தே விஞ்சிய வரிப்புலி வீரர்

## இப்படை தோற்கின் எப்படை வெல்லும் என்ற வாசகத்துக்கு உயிர் கொடுத்த செந்தமிழ் மற வேங்கைகள் இவர்கள்......!

05-03-1992இல் கட்டைக்காடு இராணுவ முகாமிலிருந்து கனரக வாகனங்கள் சகிதம் வெளியேறிய சிங்களப் படையைத் துவம்சம் செய்தும், அவர்தம் படைக்கலங் களைத் துகள் செய்தும், கைப்பற்றியும் வீரகாவியம் படைத்து தமிழனின் போர்த்திறன் புகட்டிய வீரவேங்கைகள்..... நம் தமிழீழத்தின் மைந்தர்கள்.....



லெப்டினன்ட்
**வேந்தன் (வின்சன்)**
அமிர்தநாதன் அலஸ்ரின்
( செம்பியன்பற்று )
வீரப்பிறப்பு : 01 — 05 — 1970



லெப்டினன்ட்
**கலைஞன் (நித்தியா)**
சின்னப்பிள்ளை பாஸ்கரன்
( இத்தாவில் - பளை )
வீரப்பிறப்பு : 14 — 09 — 1972

★★★



**வீரபாண்டியன் (யூலியட்)**
இம்மானுவேல் தெய்வேந்திரன்
( குருநகர் தொடர்மாடி )
வீரப்பிறப்பு : 27 — 11 — 1974

(சு/1588)

" புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர் ... யாழ்ப்பாணம்

# தமிழக அரசின் கெடுபிடியே அகதிகள் திரும்பக் காரணம்

## திரும்பி வந்தவர் தகவல்

யாழ்ப்பாணம், மார்ச் 8

தமிழகத்தில் தங்கியுள்ள ஈழ அகதிகள் மீது தமிழக அரசு கடும் கெடுபிடிகளைக் கையாண்டு வருகிறது. இதனாலேயே ஈழ அகதிகள் திரும்பி வரவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் இருந்து சமீபத்தில் திரும்பிய கல்விமான் ஒருவர் உதயனுக்கு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழகத்தில் உள்ள அகதி முகாம்கள் பலவற்றுக்கு சென்று அவர்களது அவல நிலையை பார்த்து திரும்பியுள்ள அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஈழ அகதிகளின் பிள்ளைகள் கல்வி பயில தமிழ் நாடு பல்கலைக்கழகங்களில் ஒதுக்கப்பட்டிருந்த 40 சதவீத இடங்கள் வாபஸ் பெறப்பட்டுள்ளன.

கல்லூரிகளில் அகதிப் பிள்ளைகள் கல்வி பயில தடை விதிக்கப்பட்டுள்ளது.

அகதிகள் வெளியில் நடமாடவும் முடியாது. முகாம்களுக்குள் அவர்கள் முடங்கிக் கிடக்க வேண்டும்.

ஈழ அகதிகளுக்குத் தொழில் வழங்கக் கூடாது என்று நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

ஓர் அகதிக் குடும்பத்துக்கு வாரம் 60 ரூபா (இந்தியப் பணம்) மட்டுமே வழங்கப்படுவதால், பட்டினி நிலையில் அவர்கள் வாழ வேண்டியுள்ளது.

பொலீஸார் திடீர் திடீரென முகாம்களுக்குள் புகுந்து அகதிகளை கைது செய்கிறார்கள்.

இப்படி அவர் கூறினார். [இ-3]

## 6 லட்சத்து 50 ஆயிரம் அபராதம்

கொழும்பு, மார்ச் 8

இந்தியாவிலிருந்து 26 லட்சம் ரூபா பெறுமதியான சாரங்கள், சேலைகள் என்பவற்றை 2 படகுகளில் கடத்தி வந்த 6 இலங்கையர்களுக்கு சுங்கத் திணைக்களத்தினர் தலா 6 லட்சத்து 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளதாக கொழும்பு பத்திரிகை செய்தி ஒன்று தெரிவிக்கிறது (த-10)

## ஜனதா தள் ஆதரிக்காது

இந்திய ஜனாதிபதித் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் வேட்பாளரைத் தமது கட்சி ஆதரிக்காது என ஜனதா தள் கட்சி பொதுச் செயலாளர் சரத் யாதவ் கூறினார். (த-10)

## விளக்கு இல்லாது ஓடும் மோட்டார் சைக்கிள்களுக்கு ரூபா 100 அபராதம்

'இரவு வேளைகளில் விளக்கு இல்லாமல் மோட்டார் சைக்கிள் செலுத்துவோருக்கு நூறு ரூபா அபராதம் விதிக்கப்படும்.'

தமிழீழக் காவல்துறை பொறுப்பாளர் திரு. பா. நடேசன் இதனைத் தெரிவித்தார்.

சமாந்தரமாக சைக்கிள்களில் செல்வோருக்கு அபராதம் விதிக்கும் திட்டம் அமுல் செய்யப்பட்ட பின்னர் விபத்துக்கள் குறைந்துள்ளன என்றும் அவர் தெரிவித்தார். [இ-3]

## பிரதிப் பணிப்பாளராக சபாநாயகம் நியமனம்

கல்வி, உயர்கல்வி அமைச்சில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் நாயகமாக திரு. வெற்றிவேலு சபாநாயகம் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 27 ஆம் திகதி முதல் இவரது நியமனம் அமுலுக்கு வந்தது. இதற்கு முன்னர் திரு. சபாநாயகம் கல்வி, உயர் கல்வி அமைச்சின் தமிழ் மொழிப் பிரிவுப் பணிப்பாளராகக் கடமையாற்றி வந்தார். [த-எ]

## பாடசாலை விடுமுறை நாள் குறித்து 'பாலம்' அறிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 8

பாடசாலை விடுமுறைநாட்கள் தொடர்பாக ''பாலம்'' மக்கள் பொதுப் பணி மன்றத்தின் தலைவர் அருட்திரு. ஆ. சிங்கராயர் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்,

அதன் விவரம் வருமாறு:

எமது பாடசாலைகளில் ஸ்ரீலங்காவின் விடுமுறை நாட்கள் பற்றி சரியான தெளிவின்மை காரணமாக இந்தப் பத்திரிகைக் குறிப்பை வெளியிட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளேன்.

கல்வியில் ஆர்வம் கொண்ட திணைக்கள அதிகாரிகள், கல்விப்பணிப்பாளர், இன்னும் சில கல்விமான்கள் கடந்த சில மாதங்களாக ''பாலம்'' பணிமனையில் ஒன்றுகூடி தமிழீழக் கல்வி மேம்பாட்டு பேரவையை உருவாக்கி கல்வி வளர்ச்சிக்கான திட்டங்களை பற்றி சிந்தித்து வருகிறார்கள்.

இந்த ஒன்றுகூடலின் பொழுது எமது மாணவர்கள் கற்றுமுடிக்க வேண்டிய பாடத்திட்டத்தை முடிக்க வேண்டும் என்ற ஒரேயொரு காரணத்திற்காகத்தான் எம் மக்களுக்குத் தேவையற்ற விடுமுறை நாட்களில் பாடசாலை நடத்தப்பட வேண்டும் என்ற ஒருமித்த கருத்து 14-1-1992 இல் நடந்த ஒன்றுகூடலில் தெரிவிக்கப்பட்டது.

ஸ்ரீலங்காவின் விடுமுறை நாட்களில் பாடசாலை நடத்துவதில் எவ்வித அரசியல் இலாபமும் இல்லை. அத்துடன் விடுதலைப்புலிகளால் இந்தப் பாடசாலை நாட்கள் திணிக்கப்பட்டன என்பது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது.

''பாலம்'' மக்கள் பொதுப் பணி மன்றத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட கலந்துரையாடலின் போதே இம்முடிவு எடுக்கப்பட்டது.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ]

## ஜெயலலிதா திருந்தும் காலம் வரும் என்கிறார் ராமதாஸ்

சென்னை, மார்ச் 8

''தமிழக முதல்வர் ஜெயலலிதாவை திருத்தக்கூடிய சூழ்நிலை விரைவில் வரும். அன்றைக்குத்தான் தமிழின பாதுகாப்பும், ஈழ விடுதலையும் நிச்சயம் கிடைக்கும்''

தமிழ் நாடு பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ராமதாஸ் பழனியில் திராவிடர் கழகம் சார்பில் நடந்த கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

''விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக இருப்போம். அவர்களுக்கு செய்ய வேண்டிய உதவிகளை எல்லாக் காலங்களிலும் செய்வோம் என்று பிரகடனம் செய்கிறோம்'' என்றும் அவர் அக்கூட்டத்தில் கூறினார். (இ-3)

## விழிப்புலனற்றோர் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 8

விழிப்புலனற்றோரின் நலன்களைக் கவனிக்கும் அமைப்புகள், மற்றும் அவர்களின் நலனில் அக்கறை உடையோர் கலந்து கொள்ளும் கருத்தரங்கு ஒன்று, இம் மாதம் 15 ஆம் திகதி ஞாயிறு காலை 9-30 மணிக்கு யாழ். நான்காம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள நற்சமூக நடுநிலையத்தில் நடைபெறும் [இ]


## NURSES TRAINING
### தாதி பயிலுனர்க்கான வெற்றிடம்

தாதி பயிலுனர்க்கான விண்ணப்பங்கள் மானிப்பாய் கிறீன் மெமோறியல் வைத்தியசாலை வில்லிஸ் பியர்ஸ் தாதியர் கல்லூரிக்கு கேட்கப்படுகின்றன.

இரண்டு தடைவக்கு மேற்படாது ஜி. சீ. ஈ. சாதாரணப் பரீட்சையில் 6 பாடங்களில் சித்தியெய்தி இருப்பதுடன் தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், சுகாதாரம் ஆகியவற்றினுள் 2 இல் திறமைச்சித்தி பெற்றவர்கள் பங்குனி 31 ற்கு முன் விண்ணப்பிக்கவும்.

**வயது: 18 — 22 ற்கு உட்பட்டவர்கள்.**

விண்ணப்பப் படிவங்கள் வைத்தியசாலை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

அனுப்பவேண்டிய முகவரி:

Principal,
School of Nursing,
Green Memorial Hospital,
Manipay.

[சி-1654]


## புனர்வாழ்வு, புனரமைப்பு: வடக்கு - கிழக்குப் பகுதியில் இதுவரை ரூ. 720 கோடி செலவாம்!

கொழும்பு, மார்ச் 8

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இதுவரை புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு வேலைகளுக்கென அரசாங்கம் 720 கோடி ரூபாவைச் செலவு செய்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சுச் செயலாளர் கிறிஸ்டி சில்வா இத் தகவலை தெரிவித்தார்.

இதேவேளை இலங்கைப் பொருளாதாரத் துறைக்கு நேரடியாக ஏற்பட்ட இழப்பு 200 கோடி அமெரிக்க டொலர்கள் என்று 1987 இல் உலக வங்கி மதிப்பிட்டிருந்தது என்றும் அவர் கூறினார். [அ-எ]


## வெளிவந்து விட்டது

ஏப்ரலில் நடைபெறவுள்ள 5ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்துவதற்கான புதிய முறையிலான துரித மீட்டல் பயிற்சிகள்:

**கணிதம் — 5 வினாத்தாள்கள்**
**தமிழ் — 5 வினாத்தாள்கள்**

ஆக்கம்: **திருமதி ப. இளங்கோ** (உடுவில் மகளிர் கல்லூரி)

எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

வெளியீடு: **சோதி வெளியீட்டு வாரியம்**

[சி-1585]



## வெற்றிடங்கள்

கணக்குப் பதிவாளர், கணக்காய்வாளர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்:**

1. **பொது**
   1. **கல்வித் தகைமைகள்:**

      க. பொ. த. [உ/த] பரீட்சையில் கணக்கியல், வர்த்தகமும் நிதியும் ஆகிய பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

      அல்லது

      அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் கணக்கியல் தராதரப் பத்திரம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.
2. **விசேட தகைமைகள்:**

   **அ. கணக்குப் பதிவாளர்**

   கணக்குப் பதிவாளராக ஆகக் குறைந்தது ஒரு வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

   **ஆ. கணக்காய்வாளர்**

   ஏதாவது ஒரு கற்கை நெறியில் கணக்காய்வில் சித்தியுடன், ஒரு வருட கணக்காய்வு அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

   அல்லது

   கணக்காய்வுத்துறையில் மூன்று வருடத்திற்கு குறையாத அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

**தமிழீழ மீட்புநிதி தொடர்பகம்,**
**பலாலி வீதி, திருநெல்வேலி,**
**யாழ்ப்பாணம்.**

[19995]



### உரும்பராய்
## சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோயில் கும்பாபிஷேகத் திருவிழா

கும்பாபிஷேகத் திருவிழா நிகழ்ச்சிகள் இன்று பிற்பகல் 2-30 மணிக்கு ஆரம்பமாகின்றன. எதிர்வரும் 17 ஆம் திகதி வரை— தினசரி 2-30 மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

இந்த நிகழ்ச்சிகளின் போது சைவப் பிரமுகர்கள் முருகன் மகிமை குறித்து விசேட சொற்பொழிவுகளை நிகழ்த்துவர்.

★ நிகழ்ச்சி நிரல் வருமாறு ★

| காலம் | | சொற்பொழிவாளர் |
|---|---|---|
| 08-03-1992 | — | திரு. க. நாகேஸ்வரன் |
| 09-03-1992 | — | திரு. சி. சத்திகிரீவன் |
| 10-03-1992 | — | திரு. செ. நவரத்தினம் M. A |
| 11-03-1992 | — | கவிஞர் சோ. பத்மநாதன் M. A. |
| 12-03-1992 | — | திரு. க. ஆனந்தராசா |
| 13-03-1992 | — | கவிஞர் காரை.- செ. சுந்தரம்பிள்ளை M. A. |
| 14-03-1992 | — | திரு. ஆறு. திருமுகன் |
| 15-03-1992 | — | திரு. சி. சிவலிங்கராசா M. A. |
| 16-03-1992 | — | திரு. இ. ஜெயராஜ் (கம்பன் கழகம்) |
| 17-03-1992 | — | திரு. இ. ஜெயராஜ் (கம்பன் கழகம்) |

[சி-1582]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

புதிய Panasonic Video Camera விற்பனைக்கு உண்டு. Model M8000 [MS] Model மாதிரி] Complete Set தி. சிவநாதன் [மாஸ்ரர்] மூத்த விநாயகர் கோவிலடி, கரணவாய் தெற்கு, கரவெட்டி. [19952]

## காசாளர் தேவை

புகைப்பட நிலையத்தில் கடமையாற்றுவதற்கு பெண் காசாளர் தேவை. முன் அனுபவமுள்ளவரும், பண்டத்தரிப்பு பட்டணசபை எல்லைக்குள் வசிப்பவரும் விரும்பத்தக்கது. கல்வித் தகைமை மற்றும் முழு விவரங்களுடன் சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும். இல. 388, C/o உதயன். [19966]

## மணமகள் தேவை

யாழ். இந்து, மணமுறிவுடன் கொழும்பில் வாழும், 40 வயது பட்டதாரிக்கு பங்குனியிலேயே நிச்சயித்து வெளிநாடு செல்ல விரும்பும், கல்வியும், அழகுமுள்ள மணமகள் சுயமாக, 11-3-92 க்கு முன்னர் கிடைக்க விண்ணப்பிக்கவும். சீதனம் [தாரமிழந்தவர்களுக்கும்] தடையில்லை. இல. 834, மே/பா உதயன். [4503]

## மணப்பெண்கள் தேவை

செவ்வாய்க் குற்றமற்ற 26, 29 வயது சுவிஸ் பிரஜைகளுக்கும், சைவ போசன செவ்வாய் குற்றமுள்ள (53 பாவம்) 34 வயது வங்கியாளருக்கும், குற்றமுள்ள 28 வயது கனடா பிரஜைக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். [19990]

## மணமக்கள் தேவை

யாழ். இந்து. 28 வயது நிரம்பிய ஜேர்மனியில் தொழில்புரியும் மணமகனுக்கு ஜேர்மனியில் பெண் தேவை. நட்சத்திரம் கேட்டை, செவ்வாய் 12 இல், கிரக பாவம் 20/16, இங்கிலாந்திலும் பெண்கள் தேவை, அமெரிக்காவிலும் Ph. D. Engineer உண்டு. ABCDE, 20, கண்டி றோட், சுண்டிக்குளி. [19991]

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### ஆடைகள்/துணிகள் சலவை செய்து வழங்குதல்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு, மாதத்தில் இரு தடவைகள் விஜயம் செய்து, ஆடைகள்/துணிகள் சலவை செய்து விநியோகம் செய்ய சலவைத் தொழிலாளரின் சேவை கோரப்படுகிறது.

மேற்படி சேவைக்கான விண்ணப்பப்படிவங்களை யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நலச்சேவைகள் கிளையில் 13-03-92 வரை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்கள் 13-03-92 பி. ப. 4-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

-பதிவாளர்.

[சி/1581]

## அம்பாள் திருமண சேவை

B.A Lecturer, Bank Staff ஆகியோருக்கு யாழ். நகரில் இருந்து மூன்று மைல்களுக்குள் இருக்கும் அழகிய மணப்பெண்கள் தேவை. விண்ணப்ப முற்பணம் ரூபா 50/-. சின்னச்சாமிக் குருக்கள் சண்முகஐயர், வீரமாகாளி அம்மன் கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். [19959]

## ஜோதிட விஞ்ஞானம்

சனி, செவ்வாய் பங்குனிச் சூரியனையும், வியாழனையும் நோக்குவதால் இராணுவத் தாக்குதல்கள் சண்டைகள் பரவலானாலும் அரசு பல தோல்விகளைச் சந்திக்கும். ''புத்தாண்டில் மீண்டும் அமைதி'', Prof: சத்தியதாஸன், சோபிதா, யாழ்ப்பாணம். [19999]

## வினா — விடை

உயர்தர விஞ்ஞான பாடங்களுக்கான கடந்த கால வினா — விடைகள் [Pass Papers], மாதிரி வினாத்தாள்கள் [Model Papers] விற்பனையில் உள்ளன. தொடர்பு; உயர் தரா தரக்கல்விநிலையம், ['A' Level Centre] 1 ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி. யாழ்ப்பாணம். [சி/1649]

## வவுனியா வாடி வீட்டில் தங்குவதற்கு வசதி

கொழும்பு, மார்ச் 8

வவுனியா வாடி வீடு மீண்டும் அரச அதிபரின் நிர்வாகத்தின் கீழ் இயங்க ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. வவுனியா செயலகத்தின் முன் அனுமதி பெற்று வாடி வீட்டில் தங்கலாம் என்றும் அறிவிக்கப்படுகின்றது. (ஓ-எ)

## தொழுகை வழி நடத்துவோர் கருத்தரங்கு

WORSHIP LEADER'S SEMINAR

காலம் — பங்குனி 26, 27
நேரம் — தினமும் காலை 8-30 மணி — மாலை 5-00 மணி
இடம் — "ஏலிம்" சிறுவர் இல்லம், மெமோறியல் ஒழுங்கை, மானிப்பாய்
செய்தி — போதகர் லெஸ்லி மத்தியூஸ்
கட்டணம் — ரூபா 25/- மட்டுமே

மேலதிக விவரங்கள் அறிய விரும்பின், பங்குனி 20 ஆம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளுங்கள்.

முகவரி :-
சகோ. ஏ. சி. கிறிஸ்ரோபர்,
கல்வாரி தேவாலயம், பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (4505)

## ஓராண்டு இதய அஞ்சலி



### வினாசித்தம்பி கணபதிப்பிள்ளை

[அம்பாள் ஸ்ரோர்ஸ், கிளிநொச்சி]

தோற்றம்: 23-4-1928 — மறைவு: 18-2-1991


திதி: 8-3-1992

மாதங்கள் பன்னிரண்டு சென்றுமென்ன? உங்கள் நினைவுகள் எம் நெஞ்சை விட்டகலவில்லை. பாசமுடன் எமை வளர்த்து, பாங்கான வாழ்வளித்த தெய்வமே! வருடங்கள் பல கழிந்தாலும், உங்கள் ஓவியம் எம் நெஞ்சினில் நிலைத்திடுமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய புற்றளைச் சித்திவிநாயகனை வேண்டுகிறோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

புற்றளை,
புலோலி. [19981]

## காணவில்லை



### சுப்பிரமணியராசா - சண்முகராசா

எனது மகன் சுப்பிரமணியராசா சண்முகராசாவை (தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம் 1, நிர்மாணத் திணைக்களம், புதுக்குடியிருப்ப) கடந்த அக்டோபரி (1991) லிருந்து காணவில்லை. இவரைப் பற்றிய தகவல் அறிந்தவர்கள் தயவு செய்து உடனடியாக கீழ்க் காணும் விலாசத்திற்கு அறிவிக்கவும், தகவல் தருபவருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தகவல்:
திருமதி ம. சிவசுப்பிரமணியராசா.

விலாசம்:
சி. மு. அச்சுதானந்தன்,
பாலகுமார் புத்தகசாலை
பருத்தித்துறை வீதி,
வல்வெட்டித்துறை. [4508]

## மரண அறிவித்தல்கள்

### நைற் செல்லத்துரை யூகராஜா (யூகம்)

நைற் செல்லத்துரை யூகராஜா 6-3-92 இல் காலமானார். இவர் சங்கானை தேவாலய வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற நைற் செல்லத்துரை, திருமதி இரத்தினம்மா ஆகியோரது கனிஷ்ட புத்திரனும், புஸ்பராணி, காலஞ்சென்ற கிருபராசா, ஜெயராசா, செல்வராசா புஸ்பதேவி, புஸ்பவதி ஆகியோரினது அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் சகோதரர் இல்லத்தில் 07-03-1992 இல் இடம் பெற்ற ஆராதனைகளின் பின், பூதவுடல் நல்லடக்கத்திற்காக வழுக்கையாறு சங்கானை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது என்பதை உற்றார், உறவினருக்கு அறியத் தருகிறோம்.

தகவல்:
தாய்- திருமதி இரத்தினம்மா,
சகோதரர்- செ. ஜெயராசா,
செ. செல்வராசா.

கிப்றோன்,
தேவாலய வீதி,
சங்கானை. (20001)

### தவமணி கனகரத்தினம்

சுழிபுரத்தைச் சேர்ந்த தவமணி கனகரத்தினம் சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் மலாயன் பென்சனர் ஆறுமுகம் கனகரத்தினத்தின் மனைவியும், காலஞ்சென்ற சிவகுரு சுப்பையா - இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் மகளும், காலஞ் சென்ற மயில்வாகனம் [Director, Finance), சிவகுருநாதன் [Director, Agrarian Services], அவர்களின் சகோதரியும், காலஞ் சென்ற இராசபட்சம் [Director, P. W. D] அவர்களின் மைத்துனியும், Dr. வசந்தமாளிகா கருணாகரன் [யாழ் போதனா வைத்தியசாலை], இராஜசூரியர் [பொறியியலாளர், Bahamas], உதயசங்கர் [பொறியியலாளர், U.K.] ஆகியோரின் தாயாரும், Dr. கருணாகரன், Dr சாந்தினி இராஜசூரியர் ஆகியோரின் மாமியாரும், வித்யன், பாலமுருகன், கிருஷ்ண காயத்திரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

ஈமக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று 08-03-92 காலை 9 மணியளவில் நடைபெற்று பூதவுடல் திருவடிநிலையில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
Dr. திருமதி V. M. கருணாகரன்.
(மகள்)

காளுவன் சந்தி,
சுழிபுரம். [20002]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### சிங்களத் தலைவர்களுக்கு....!

விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் அரசாங்கம் பேசுவதா, இல்லையா என்பது நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் முடிவைப் பொறுத்துள்ளது.

அமைச்சரவைப் பேச்சாளர் திரு. ரணில் விக்கிரமசிங்கா இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொறுப்பை முழுக்க முழுக்கத் தெரிவுக்குழுவிடமே சுமத்திவிட்டு, அரசு தனது பதவியைக் காப்பாற்ற முடிவு செய்துவிட்டது என்பதனை அமைச்சரின் கூற்று உறுதி செய்கிறது!

இது அரசு தனக்குள்ள ஒரு பிரதான பொறுப்பிலிருந்து நழுவிக் கொள்ளும் உபாயமாகும். இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை இழுத்தடித்து நாட்கடத்தும் தந்திரமாகும்.

தமிழர் பிரச்சினை தீர்க்கப் படாவிட்டால் நாடு எல்லா வகைகளாலும், வழிகளாலும் சீரழியும் என்பது அரசுக்குத் தெரியாமல் இல்லை. இரத்தக் களரி தொடர்ந்தால், நாடு, நாடாக இருக்க முடியாது என்பதும் அது பிளவுண்டு போகும் என்பதும் அரசு அறிந்திருக்க வேண்டிய ஒன்று.

எனினும் தனக்குள்ள பொறுப்பை, பாரத்தை இன்னொருவர் தலையில்சுமத்தும் வேண்டாத சோதனையில் அரசு இறங்கி இருக்கிறது. நாட்டைப் பற்றி, மக்களைப் பற்றி அரசுக்கு அக்கறை இல்லை என்பதையே இந்தப் பொறுப்பற்ற தன்மை எடுத்துக் காட்டுகிறது.

எதிர்க்கட்சிகள், உண்மையான, சனநாயக மரபடைந்த எதிர்க்கட்சிகளானால், தேசிய நோக்குடையவையானால், அரசாங்கத்தின் மீது, அது தனது பொறுப்பை தட்டிக் கழிக்க முயற்சிப்பதை அடியிருத்தி அதன் மீது நம்பிக்கையில்லாப் ப்ரேரணையைக் கொண்டு வர வேண்டும்.

ஆனால் அவை அப்படிச் செய்யமாட்டா அது நிச்சயம். ஏனெனில் அவர்கள் எல்லோருமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளே.

இதனை ஆழ்ந்து, அகன்று தூரதிருஷ்டியுடன் ஆராயின், ஒரே ஒரு முடிவு தென்படும். சிங்கள அரசியல் வாதிகள் தமிழர் பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் காணுவார்கள் என்பது மிகவும் சந்தேகத்துக்குரியது. அந்த எடுகோளில் இருந்து ஒரு புதிய தேற்றம் விளையும். அந்தத் தேற்றம் என்ன?

தமிழர் பிரச்சினைக்குத் தமிழர்களே தீர்வு கண்டாக வேண்டும் என்பது தான். தங்கள் உரிமைகளை சிங்களவர்களிடம் இருந்து பெற வேண்டும் என்ற நிலை மாறும். தமது உரிமைகளைத் தாமே படைத்துக் கொண்டு அனுபவிக்க வேண்டும் என்ற ஒரு கட்டத்துக்கு தமிழர்கள் இழுத்துச் செல்லப்படுவர்.

சிறிதேனும் தீர்க்க தரிசனம் இன்றி, தமிழர் பிரச்சினையைத் தமது பிடிக்குள் வைத்திருக்க முயலும் சிங்களத் தலைவர்களுக்கு இது ஓர் படிப்பினையாக மட்டுமன்றி, இழப்பாகவும் அமையும். அப்போது அவர்களே கவலைப்பட நேரிடும். காலம் தங்கள் பக்கத்திற்கு மட்டும் சார்ந்திருப்பதாக அவர்கள் கருதினால் இப்போதே தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணட்டும். இல்லையேல் காலம் அவர்களைக் கைவிடுவது நிச்சயம். அதனால் கஷ்டவாளிகளாவதும், நஷ்டவாளிகளாவதும் அவர்களாகவே இருப்பர். சிங்களத் தலைவர்களுக்கு இது சமர்ப்பணம்!

# பெண்ணுக்கு விடுதலையின்றி மண்ணுக்கு விடுதலை இல்லை!

**இன்று சர்வதேச மகளிர் தினமாகும். அதனையொட்டி விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியின் வெளியீடு ஒன்று இங்கு பிரசுரமாகின்றது.**

**பெண்** இனத்தின் ஆற்றல்களை வியப்புடன் உலகு நோக்குகின்ற யுகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஆனாலும் பெண்ணின் பிறப்புரிமையை முற்று முழுவதுமாக ஏற்றுக் கொள்ளும் நாகரிகத்தை இன்னும் உலகம் முழுவதும் அடைந்து விடவில்லை. உலகளாவிய ரீதியில் பெண்களின் நிலைப்பாடு இதுதான்.

இதே போன்று தான் தமிழீழப் பெண்களாகிய எமது வாழ்வின் நிலையும் உள்ளது. தமிழ்ப் பெண்கள் என்பதால் எமது சொந்த நாட்டில் வாழும் உரிமையே மறுக்கப்படும் நிலைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறோம். அதே வேளை எமது சமூகத்திலேயே எமது உணர்வுகள் அலட்சியப்படுத்தப்பட்டு அவமதிக்கப்படுகின்றன.

### உயிர்ப்புடன் எழுவோம்

உணர்வுகள் மிதிக்கப்பட்டு, உரிமைகள் பறிக்கப்பட்டு உயிரற்ற சடமாக மதிக்கப்படும் அவல வாழ்வுக்கு நாம் முடிவு கட்ட வேண்டாமா?

பட்டினியை எம்மால் பழக்கப்படுத்திக்கொள்ள முடியும்; ஆனால் பாலியல் வன்முறைக்குட்படுத்தி எமது பெண்களைச் சித்திரவதை செய்து கொண்டிருக்கும் சிங்கள இராணுவத்தின் கீழ்த்தரமான நடவடிக்கைகளை சகித்துக் கொண்டிருக்க முடியாது. தடைக்கு மேல் தடைகள் போட்டு எமது தன்மானத்துக்கு சவால் விட்டுக் கொண்டிருக்கும் இனவாத அரசின் கனவுகளுக்குத் தீனி போடும் விதத்தில் சோம்பியிருக்காமல் நாம் உயிர்ப்புடன் எழுந்து கொள்ள வேண்டும்.

பட்டினிச் சாவுகளும், அரச அழிப்புகளும் எம்மைப் பலப்படுத்த வேண்டுமேயன்றி தளர்ந்து போக விடக் கூடாது.

பெண்ணுக்கு விடுதலை இல்லையென்றால் எம் மண்ணுக்கும் விடுதலை இல்லை. இதில் தெளிவாக உள்ள விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து, தீரத்துடனும், தியாக உணர்வுடனும் போரிட்டு, தமது ஆற்றலை, ஆளுமையை பெண்கள் பலப்படுத்தி, பெண்மையின் உண்மையை, பெரு வீரத்தை பறை சாற்றும் புரட்சிகரமான நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இதனை அனைத்துப் பெண்களும் புரிந்து சொள்ள வேண்டும்; தன்னம்பிக்கையுடன் எழுந்து கொள்ள வேண்டும்.

### சமூகத்தில் அவலம்

அரசின் ஆக்கிரமிப்புச் செயற்பாடுகளால் மட்டுமல்லாமல், எங்கள் சமூகத்தின் நடைமுறைகள், கைக்கொள்ளும் வழிமுறைகளாலும் நாம் அவல வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். கைம் பெண்களின் கவலைகளையும், கண்ணீரையும் அலட்சியப்படுத்தி அவர்களை அலைக்கழிந்த வாழ்வு வாழ வைப்பதும் —

மனைவி இருக்கும் போதே கணவன் மறுமணம் செய்து மனைவியை உடல், உளப் பாதிப்புகளுக்கு உள்ளாக்குவதும் —

திருமணம் செய்து இன்னுமொரு வீட்டுக்கு போகிறவர்கள் தானே பெண்கள் என்றும், அவர்களின் கல்விக்காக பணம் செலவழிப்பது வீண் என்றும் கருதி அவர்களின் கல்வி வாய்ப்பையே பாழாக்குவதும் —

மதக் கோட்பாடுகளை வலியுறுத்தி பெண்களை நிமிரவே விடாமல் அறியாமை இருளுக்குள் அவர்களை அமிழ்த்தி வைப்பதும் —

இப்படி எமது சமூகத்தில் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் பலவாகும்.

பிறந்த வேளையிலிருந்தே சீதனத்துக்காக பொருளும், பணமும் சேர்க்க வேண்டுமென்பதால் பெண் குழந்தையே வேண்டாம் என ஒதுக்கப்பட்டு அவமதிக்கப்பட்டு வருகிறோம். மதக்கோட்பாட்டு வலியுறுத்தலின் விளைவால் 'அடங்கி ஒடுங்கி அடிமையாய் வாழ்வது எமது விதி' என்று ஊமையாய் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.

தமக்கெதிராக இழைக்கப்படும் அநீதிகளைச் சகித்துக் கொண்டு விதியே என்று வாழ்வது பெண்ணுக்கு வேண்டாம் எனபதனையும், அதற்கெதிராகக் கிளர்ந்தெழுந்து போராடி விடுதலையை வென்றெடுக்க வேண்டியது பெண்களின் கடமை என்பதனையும் வலியுறுத்தும் நாளே இன்றைய தினமாகும்.

இந்த நாளில், தமிழீழப் பெண்களாகிய நாம் இனியும் இன்னமும் அறியாமைக்குள் முடங்கி எமது உரிமைகளை இழந்து கொண்டே இருக்க மாட்டோம் என்றும் —

'எம்மீது சிங்கள அரசு மேற்கொள்ளும் அடக்குமுறை வடிவங்களை உடைத்தெறிவதற்கானபோரில் மட்டுமல்லாமல் சமூகத்தின் ஒடுக்குமுறைத் தத்துவங்களைத் தகர்க்கும் போராட்டத்திலும் எம்மை முழுமையாக ஈடுபடுத்தி எமது விடுதலையை வென்றெடுப்போம்' என்றும் உறுதி பூணுவோமாக! ★

# மண் மீட்புப் போரில்....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாள். இந்தப் பெண் எழுச்சி தினம் இன்று தமிழீழம் எங்கும் கொண்டாடப்படுவதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

பெண் ஒடுக்குமுறை என்பது யுகம் யுகமாக எல்லா நாடுகளிலும், எல்லா சமூகங்களிலும், எல்லாப் பண்பாடுகளிலும் நிலவிவந்த ஒரு சமூக அநீதி. இந்த சமூக அநீதிமுறை இன்னும் இந்தப் பூமியிலிருந்து அகன்றுவிடவில்லை.

நீண்ட காலமாக, வளர்ச்சி கண்ட நாடுகளில், தொடர்ச்சியாக நடந்துவந்த உரிமைப் போராட்டங்களின் பலாபலனாக, பெண்ணினம் குறிப்பிடத்தக்க சில வெற்றிகளை மட்டும் ஈட்டிக்கொள்ள முடிந்தது. அடிப்படையான மனித உரிமைகளையும் அரசியல் சுதந்திரங்களையும் பெண்கள் வென்றெடுக்க முடிந்தது. கல்வி வாய்ப்பும் தொழில் வாய்ப்பும் பெற்றுக்கொள்ள முடிந்தது. எனினும் இந்த நாடுகளில் பெண்ணின் பிரச்சினைகள் தீர்ந்தபாடில்லை. இங்கு பழைய பிரச்சினைகள் புதிய வடிவங்களில் தோற்றம் கண்டு வருகின்றன.

### சமதர்ம உலகிலும் சமநீதி கிடைக்கவில்லை

அன்றொரு காலம், மேற்குலகில், முதலாளித்துவம் எழுச்சி கொண்டு வளர்ச்சி கண்ட சகாப்தத்தில் பெண்ணினம் மிகவும் ஈவிரக்கமற்ற சுரண்டல் முறைக்கு ஆளாகியது. அப்பொழுது பெண் ஒடுக்குமுறையின் மூலகாரணி முதலாளித்துவம் எனக் கூறப்பட்டது. தனியார் சொத்துடைமை நீக்கப்பட்டால், சமத்துவமற்ற பொருளாதார அமைப்பு ஒழிக்கப்பட்டால், பொருள் உற்பத்தியில் பெண்கள் ஈடுபட்டால் பெண்ணினத்திற்கு விடிவு காலம் பிறக்கும் என வாதங்களும் முன்வைக்கப்பட்டன. இதனால் விடுதலை வேண்டி நின்ற பெண்ணினம் சமூகப் புரட்சிப் போராட்டங்களில் அணிசேர்ந்து கொண்டது; பெண்களின் பங்களிப்புடன் பல நாடுகளில் சமூகப் புரட்சிகள் நிகழ்ந்தன. சமுதாய மாற்ற மூலம் பொருளாதார சமத்துவத்தைக் கட்டி எழுப்பிய நாடுகளில் பெண்களின் வாழ்க்கை நிலை உயர்ந்தது; சமூக அந்தஸ்து மேம்பட்டது! ஆயினும் இந்நாடுகளில் பெண் ஒடுக்குமுறை முற்றாக நீங்கியபாடில்லை. சமதர்ம சமூக உலகத்திலும் பெண்ணுக்குச் சமநீதி கிடைத்ததாகக் கூறிவிட முடியாது.

### மானசீக உலகிலும் மாற்றங்கள் தேவை

இந்த சமூக பரிசோதனை அனுபவங்களிலிருந்து நாம் ஓர் உண்மையைக் கண்டு கொள்ளலாம். அதாவது பொருளுலகத்தை எந்தெந்த வடிவங்களில் சீரமைத்தாலும், ஆண்களின் மனோவுலகில், பெண்மை பற்றிய அவர்களது கருத்துலகில், ஆழமான மாற்றங்கள் நிகழாமல் பெண் சமத்துவம் சாத்தியமாகப் போவதில்லை.

பெண்ணினத்தின் விடுதலை நோக்கிய பாதையில், அவர்களது சமூகப் பொருளாதார வாழ்வு மேம்படுவது அவசியம் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆயினும், அதே வேளை, ஆண்-பெண் உறவிலும், அந்த மானசீக உலகிலும் மாற்றங்கள் தேவை. உண்மையான சமத்துவம் என்பது ஆண்—பெண் உறவில் எழும் ஆழமான புரிந்துணர்வில்தான் சாத்தியமாகிறது.

எமது சமூகக் கட்டமைப்பில் பெண்ணினம் மிகவும் மோசமான ஒடுக்குமுறை வடிவங்களை எதிர்கொண்டு நிற்கிறது. மிகவும் பின் தங்கிய சமூக, பொருளாதார வாழ்வு ஒரு புறமும், அரச அடக்குமுறை அழுத்தங்கள் மறுபுறமும் ஆணாதிக்க கொடுமைகள் இன்னொரு புறமுமாக பல பரிமாணங்களில் எமது பெண்கள் ஒடுக்கு முறையைச் சந்திக்கின்றார்கள். இங்கு பெண் விடுதலை என்பது ஒரே காலத்தில் பல்வேறு முனைகளில் தொடுக்கப்பட வேண்டிய ஒரு போராட்டமாக அமைந்துவிட்டது.

### அடிப்படைக் குறிக்கோள்

எமது தேசிய சுதந்திர இயக்கம் பெண் விடுதலையைத் தனது அடிப்படை அரசியல் குறிக்கோள்களில் ஒன்றாக வரித்துக்கொண்டு செயற்பட்டு வருகிறது.

பெண் விடுதலை எனும் பொழுது அரச அடக்கு முறையிலிருந்தும், சமூக ஒடுக்குமுறையிலிருந்தும், பொருளாதார சுரண்டல் முறையிலிருந்தும் பெண்ணினம் விடுதலை பெறுவதையே குறிக்கிறோம். எனவே, எமது இயக்கம் வடிவமைத்துள்ள பெண் விடுதலை போராட்டமானது தேச விடுதலை, சமூக விடுதலை, பொருளாதார விடுதலை என்ற குறிக்கோள்களைக் கொண்ட மும்முனை விடுதலைப் போராட்டமாக முன்னெடுக்கப்படுகிறது.

இந்த மும்முனைப்போராட்டங்களில் தேசிய விடுதலை, அதாவது எமது மண்ணின் விடுதலை முக்கியமானது. எதிரியால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் எமது மண்ணை முதலில் மீட்டெடுப்பது இன்றைய வரலாற்றின் தேவை. இந்த வரலாற்று நிர்ப்பந்தத்தை நாம் அசட்டை செய்ய முடியாது. எமது மண்ணின் விடுதலை பெண்ணின் விடுதலைக்கு மட்டுமன்றி, எமது இனத்தின் விடுதலைக்கும் அத்திவாரமானது.

### மாபெரும் சாதனை

இந்த மண்மீட்புப் போர்க்களத்தில் இன்று தமிழ் இளம் பெண்கள் ஆயுதமேந்தி நிற்கிறார்கள்; முழு உலகமுமே வியக்கும் வகையில் அபாரமான அர்ப்பணிப்புகளைச் செய்து வருகிறார்கள்.

விடுதலைப் புலிகளின் மகளிர் படைப் பிரிவின் தோற்றமும், வளர்ச்சியும், எழுச்சியும் எமது இயக்கம் படைத்த மாபெரும் சாதனைகளில் ஒன்று என்பதை நான் பெருமிதத்துடன் கூற முடியும். தமிழீழப் பெண்ணினத்தின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் இது ஒரு புரட்சிகரமான திருப்பத்தைக் குறித்து நிற்கிறது.

ஒரு விடுதலை இயக்கத்துடன் அணி சேர்ந்து கொள்வதன் மூலமே பெண்ணினம் தனது விடுதலை நோக்கிய இலட்சியப் பாதையில் வெற்றி பெற முடியும் வீரமும், தியாகமும், துணிவும், தன்னம்பிக்கையும் கொண்ட புரட்சிப் பெண்களாக மாற முடியும், பெண் விடுதலைக்கு களம் அமைத்துக் கொடுத்திருக்கும் எமது புரட்சி இயக்கத்துடன் பெண்ணினம் அணி சேரும் பொழுதுதான் எமது போராட்டமும் முழுமை பெறும்.

### துன்பங்கள்

எமது சமுதாய அமைப்பில் நிலவிவரும் ஒடுக்குமுறை அழுத்தங்களிலிருந்தும் பெண்ணினம் விடுதலை வேண்டி நிற்கிறது. நீண்ட, நெடுங்காலமாக எமது சமூகத்தில் வேரூன்றி வளர்ந்த மூட நம்பிக்கைகளும், இந்த மூடநம்பிக்கைகளிலிருந்து தோற்றம் கொண்ட சமூக வழக்குகளும் சம்பிரதாயங்களும் எமது பெண்களின் வாழ்க்கையை சீரழித்து வருகின்றன. ஆணாதிக்க அடக்குமுறையாலும், வன்முறையாலும், சாதியம், சீதனம் என்ற கொடுமைகளாலும் தமிழீழப் பெண்ணினம் விவரிக்க முடியாத துன்பங்களை அனுபவித்து வருகிறது.

### விடுதலைக்கு முதற்படி

இந்த ஒடுக்குமுறைச் சிறையிலிருந்து விடுதலை பெறுவதானால் பெண்ணினம் முதலில் தனக்கு எதிராக ஏவப்பட்டுவரும் ஒடுக்கு முறையின் தன்

[6ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் 5 இடங்களில் மகளிர் தினக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 8

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி நடத்தும் பொதுக்கூட்டங்கள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் இன்று குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெறவுள்ளன. அவற்றின் விவரம் வருமாறு:-

★ வலிகாமம்; - மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி மைதானம் — இரவு 7 மணி.

★ தீவகம்:- நாவற்குழி சின்ன அருள் சனசமூக நிலையம் அருகில் — இரவு 8 மணி.

★ தென்மராட்சி;- சாவகச்சேரி இந்துக்கல்லூரி — இரவு 7 மணி.

★ வடமராட்சி;- பருத்தித்துறை பழைய பஸ்நிலையம் — இரவு 7 மணி.

★ கடற்புலிப் பிரிவு நடத்தும் நிகழ்ச்சி:- பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டு மைதானம் — இரவு 7 மணி. [உ]

# மண்மீட்புப் போரில்..

[5 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மைகளைப் புரிந்து கொள்ள வேண்டும். தனது சீரழிந்த வாழ்க்கை நிலையைச் சீரமைத்துக் கொள்வதானால் பெண்ணினம் தனது இழிநிலையகற்றி விழிப்புக் கொள்ள வேண்டும். தலைவிதி என்றும் கர்ம வினை என்றும், தனக்காக விதிக்கப்பட்ட மனுநீதி என்றும், பழைமை என்றும், பண்பாட்டுக் கோலம் என்றும் காலம் காலமாக மனவுலக இருளுக்குள் முடங்கிக்கிடந்த பெண்ணினம் விழித்தெழ வேண்டும்.

விழிப்புத்தான் விடுதலைக்கு முதற்படி.

விழிப்படைந்து எழுச்சி கொள்ளும் பெண்ணினமே ஒரு போராட்ட சக்தியாக உருப்பெற முடியும். அந்தப் போராட்ட சக்தியால் தான் ஒடுக்குமுறை விலங்குகளை உடைத்தெறிய முடியும்.

## ஆண்களுக்கு எதிரான போராட்டம் அல்ல

ஆணாதிக்க ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம் என்பது ஆண்களுக்கு எதிரான போராட்டம் அல்ல. இது ஆணாதிக்க அறியாமைக்கு எதிரான கருத்துப் போராட்டமாகும். இந்தச் சித்தாந்தப் போராட்டம் ஆண்களின் மனவுலக மாற்றத்தைக் குறிக்கோளாகக் கொண்டிருக்க வேண்டும்.

மனித உறவுகளில் அடிப்படையானது ஆண் – பெண் உறவு. இந்த உறவு சாதாரண சமூக உறவு அல்ல. இது மனித உயிர் இயக்கத்திற்கும், மனித இன விருத்திக்கும் மூலமானது மனித இனத்தின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் ஆதாரமானது.

ஆண்–பெண் உறவில் எழும் அபசுரங்களாகவே இன்று பெண்ணினம் எதிர்கொள்ளும் பல அவலங்கள் தோற்றம் கொள்கின்றன.

ஆணும் பெண்ணும் ஒத்திசைவாக ஒருவர் மற்றவரின் சுதந்திரத்தையும், சமத்துவத்தையும், கௌரவத்தையும் மதித்து, குடும்ப வாழ்வின் பொறுப்புகளைப் பகிர்ந்து, சமூகத்தின் மேம்பாட்டிற்கு உழைத்து, பரஸ்பர புரிந்துணர்வுடன் பற்றுக்கொண்டு வாழ்ந்தால் இந்தப் பால் வேறுபாட்டால் எழும் பல்வேறு முரண்பாடுகள் நீங்கும் இந்த அன்புறவின் ஆழமான அர்த்தத்தையும் முக்கியத்துவத்தையும் ஆணினம் புரிந்து கொள்ளும் பொழுது தான் ஆணாதிக்கமும் அதனால் எழும் அதிகார அடக்குமுறைகளும் அகன்றுவிட வாய்ப்புண்டு.

உலகப் பெண்ணினத்தின் எழுச்சி நாளை முன்னிட்டு விடுதலைப் புலிகளின் மகளிர் முன்னணி இன்று நடத்தும் தமிழீழப் பெண்கள் மாநாட்டிற்கு எனது நல்லாசியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ]


சுன்னாகம் ஐயனார் ஆலய வருடாந்த மகோற்சவத்தையொட்டிய தெய்வீக

## இசையரங்கும் சமயச் சொற்பொழிவும்

[08-03-92] இன்று முதலாம் திருவிழா

பகல்: 10.30 மணி — கொடியேற்றம்

மாலை: 6.45 — 8.15 — இசைக்கச்சேரி

சங்கீதபூஷணம்: N. V. M. நவரத்தினம்

8.15 — 9.15 — சமயச் சொற்பொழிவு

அகில இலங்கை கம்பன் கழகம் இ. ஜெயராஜ்

**ஐயனார் ஆலயம், சுன்னாகம்.**

(20010)



## PROFESSIONAL COMPUTER STUDIES

1. **d BASE III Plus** (Special Course for Accounts Personals)
2. **Word Processing** (Professional Course for all Secretaries)
3. **G. W. BASIC** (Language Suitable for Beginners)

FOR DETAILS CONTACT:

R. Karthigesan,
No. 476, Chundikuli,
[Near Chundikuli, Old Park Road Junction]

[C 1630]


# இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 8

யாழ். மாவட்ட சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை அங்கத்தவர்களுக்கான கருத்தரங்கு ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெறவிருக்கிறது. [உ-]3

# காங்கேசன்.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாகன அணிக்கு முன்பாகவும் பின்பாகவும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுப் பிரதிநிதிகள் வாகனங்களில் சென்றனர்.

கீரிமலை பஸ்நிலையப் பகுதியில் முகாமிட்டுள்ள படையினர் அங்கு வைத்து லொறிகளைச் சோதனையிட்டு பின்னர் அவற்றைப் பொறுப்பேற்று களஞ்சியப் பகுதிக்கு ஓட்டிச் சென்றனர்.

வாகன அணியுடன் சென்ற யாழ். செயலகப் பிரதிநிதி ஒருவர் மட்டும் கவச வாகனம் ஒன்றில் படையினரால் களஞ்சியப் பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

சாரதிகளும், நடத்துனர்களும் கீரிமலை பஸ்நிலையப் பகுதியில் காத்து நின்றனர்.

அங்கு வைத்தே மீண்டும் பொருள்களுடன் வந்த லொறிகளை அவர்கள் பொறுப்பேற்றனர். [உ-5]


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## கேள்வி அறிவித்தல்

## தனியார் பாதுகாப்புச்சேவை

கிளிநொச்சி விவசாய பீடத்தில் பாதுகாப்புச் சேவையை மேற்கொள்வதற்கு சிவில் பாதுகாப்பு அமைச்சில் பதிவுசெய்துள்ள தனியார் பாதுகாப்பு முகவர் அமைப்புகளிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகளை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் கோருகின்றது.

கேள்விப் படிவங்களை மீளளிக்கப்படாத வைப்பான ரூபா 250/- ஐயும் மீளளிக்கப்படும் வைப்பான ரூபா 2500/- ஐயும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரிடம் செலுத்திப் பெற்ற பற்றுச் சீட்டுக்களைச் சமர்ப்பித்து 1992 – 03 – 31 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகக் கிளையின உதவிப்பதிவாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

கேள்வியாளர் 24 மணித்தியாலமும் விவசாயபீடத்திலுள்ள 3 காவல் நிலைகளையும் காவல் புரிவதற்கு பதவியினரை தொழிலில் அமர்த்த தயாராக இருத்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்படிவங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளருக்கு 1992–04–06 –ம் திகதி நண்பகல் 12-00 மணிக்கோ அல்லது அதற்கு முன்னரோ சென்றடையக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

எந்தவொரு கேள்வியையும் நிராகரிக்கும் உரிமை யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கேள்விச் சபைக்கு உண்டு.

- பதிவாளர்

[சிஎல்]


# இந்திய, ஆஸி. அணிகள் நேற்று வெற்றி பெற்றன

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டித்தொடரில் நேற்று நியூஸிலாந்து ஹமில்டன் நகரில் நடைபெற்ற ஆட்டத்தில் இந்தியா ஸிம்பாப்வேயை 54 ஓட்டங்களினால் தோற்கடித்தது.

மழை காரணமாக 32 மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களாக இந்த ஆட்டம் ஆரம்பத்திலேயே குறைக்கப்பட்டது. இந்தியா 7 விக்கெட் இழப்புக்கு 203 ஓட்டங்களை எடுத்தது.

பின்னர் துடுப்பெடுத்தாடிய ஸிம்பாப்வே, 19 ஓவர்களில் 1 விக்கெட் இழப்புக்கு 104 ஓட்டங்களை பெற்றிருந்த போது மழை காரணமாக ஆட்டம் நிறுத்தப்பட்டது.

அதுவரை முடிவுற்ற 19 ஓவர்களிலும் இரு தரப்பினரும் பெற்ற ஓட்டங்களின் அடிப்படையில் இந்தியா வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

77 பந்து வீச்சுக்களை மட்டும் எதிர்கொண்டு 81 ஓட்டங்களைப் பெற்ற சச்சின் டெண்டுல்கர் சிறந்த வீரராகத் தெரிவானார்.

அடிலயிட்டில் நடைபெற்ற மற்றொரு போட்டியில் ஆஸ்திரேலியா ஸ்ரீலங்கா அணியை 7 விக்கெட்டுகளினால் தோற்கடித்தது.

ஸ்ரீலங்கா 50 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 189 ஓட்டங்களை எடுத்தது. ஆஸி அணி 3 விக்கெட் இழப்புக்கு 190 ஓட்டங்களைப் பெற்று வென்றது. [உ-த]

# கடற் சாரணருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 8

கடற் புலிகளின் அனுசரணையுடன் இன்று நடைபெறவிருக்கும் மகளிர் தின நிகழ்ச்சிகளின் போது சேவையாற்றுவதற்கு கடற்சாரணர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

இன்று பிற்பகல் 4 30மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் கோவிலில் கூடுமாறு சகல கடற் சாரணர்களையும் கடற் சாரணர்களுக்குப் பொறுப்பான உதவி மாவட்ட ஆணையாளர் கேட்டுள்ளார். [உ-5]

# கட்டைக்காட்டில் நேற்றும் ஆயுதங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 8

கட்டைக்காட்டுப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை சண்டை நடந்த இடத்தில் இருந்து நேற்றும் பல ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன. இராணுவச் சிப்பாயின் சடலம் ஒன்றும் கைப்பற்றப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை நடந்த உக்கிர மோதல்களின் போது பெருவாரியான ஆயுதங்களும் படையினரின் சடலங்களும் கைப்பற்றப்பட்டன என்பதும், அதன் பின்னர் நேற்று முன்தினமும் ஆயுதங்கள் சில கைப்பற்றப்பட்டன என்பதும் தெரிந்தவையே. [ஓ-5]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தனலட்சுமி கதிர்காமதாஸன்

திருமதி தனலட்சுமி கதிர்காமதாஸன் [இளைப்பாறிய ஆசிரியை இணுவில் சைவப்பிரகாச ம. வி.] காலமானார்.

இவர் இணுவில் சைவப்பிரகாச மகாவித்தியாலய ஆசிரியர் திரு. செ. கதிர்காமதாஸன் அவர்களது அன்பு மனைவியும், சிறுப்பிட்டியைச் சேர்ந்த இளையதம்பி சின்னதங்கம் அவர்களின் அன்பு மகளும், கண்ணன் [பிரான்ஸ்], லலிதாம்பிகை, யோகநாயகி, ராதிகா ஆகியோரின் அன்புத் தாயாரும், தனபாக்கியம், பொன்னம்பலம் [லண்டன்], பாலசிங்கம் [மின்சாரசபை, சுன்னாகம்], சுப்பிரமணியம் [இ. போ. ச. கோண்டாவில்], அன்னம்மா, பூமணி, இராசமணி [பிரதேச சபை, நீர்வேலி] ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [08-03-92] பிற்பகல் 1.00 மணிக்கு இணுவிலில் நடைபெறும் என்பதை அறியத்தருகிறோம்.

இணுவில்.

தகவல்:
செ. கதிர்காமதாஸன்

(20008)

## மூத்ததம்பி தம்பையா

[தொண்டமானாறு]

மூத்ததம்பி தம்பையா காலமானார். இவர் காலஞ்சென்ற திருமதி றோசம்மா தம்பையாவின் அன்புக் கணவரும் S. G. தம்பையா [U. K. முன்னாள் வெஸ்லி கல்லூரி ஆசிரியர்] அவர்களின் தகப்பனாரும் ஜெபராணி தம்பையாவின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான திரு. மூத்ததம்பி உபதேசியார் [உடுத்துறை அங்கிலிக்கன் திருச்சபை], திருமதி செல்லமுத்து மூத்ததம்பி ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மூ. சின்னையா [பருத்தித்துறை], காலஞ்சென்ற திருமதி பாக்கியம் செல்லையா [உடுத்துறை], காலஞ்சென்ற மூ. முத்தையா [மட்டுவில்], காலஞ்சென்ற கனகம்மா பொன்னையா, Dr. A. N. மூத்ததம்பி, மூ. சாமுவேல் ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருமதி K. P. முத்தையா [இளைப்பாறிய ஆசிரியை சுண்டுக்குளி மகளிர் கல்லூரி] அவர்களின் மாமனாரும் அஜித், வானதி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை இன்று ஞாயிற்றுக்கிழமை இலக்கம் 12, பேரின்பநாயகம் வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக சுண்டுக்குளி பரி. யோவான் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
M. ஜெபராசா

[20007]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 8-3-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org